


## பா.ஜ.க. ஆட்சியில் பெண்களுக்குப் பாதுகாப்பில்லை!

# மோடியின் ஆட்சி விரைவில் தூக்கி எறியப்படும்!

### மணிப்பூர் பெண்களுக்கு ஆதரவாக மகளிர் அணி சார்பில் நடைபெற்ற மாபெரும் கண்டன ஆர்ப்பாட்டத்தில் கனிமொழி கருணாநிதி எம்.பி. எச்சரிக்கை!

**சென்னை, ஜூலை 24 -**

**“பா.ஜ.க. ஆட்சியில் பெண்களுக்குப் பாதுகாப்பில்லை. மோடியின் ஆட்சி விரைவில் தூக்கி எறியப்படும்” என்று கழக துணைப் பொதுச் செயலாளரும் நாடாளுமன்ற மக்களவை கழகக் குழு துணைத் தலைவருமான கனிமொழி கருணாநிதி அவர்கள் கண்டன உரையாற்றும் போது கூறினார்.**

மணிப்பூர் மாநிலத்தில் பிஜேபி ஆட்சியில் நடந்துகொண்டிருக்கக் கூடிய கலவரங்களைக் கண்டித்தும், அங்கே கடும் பாதிப்புக்கு உள்ளாகும் பெண்களுக்கு பாதுகாப்பு கோரியும் திமுக மகளிரணி மற்றும் மகளிர் தொண்டரணி சார்பில் சென்னையில் கண்டன ஆர்ப்பாட்டம் நேற்று நடைபெற்றது. இந்த ஆர்ப்பாட்டத்தில் கழக துணைப் பொதுச் செயலாளரும், நாடாளுமன்ற கழகக் குழுத் துணைத் தலைவருமான கனிமொழி கருணாநிதி எம்.பி. கலந்துகொண்டு கண்டன உரையாற்றினார்.

அவர் ஆற்றிய உரை வருமாறு:-

“திராவிட முன்னேற்றக் கழகத்தின் மகளிரணி சார்பிலே ஆர்ப்பாட்டத்தை சென்னையிலே நடத்திக் கொண்டிருக்கிறோம், மாவட்ட தலைநகரங்களிலும் நடக்கப் போகிறது. இந்த நாட்டில் எந்த மூலையிலே பெண்களுக்கு எந்த பாதிப்பு என்றாலும் போராட நாங்கள் இருக்கிறோம் என்று சொல்லி இங்கே மகளிரணி சகோதரிகள் கூடியிருக்கிறீர்கள்.

பாஜக ஆட்சிப் பொறுப்பேற்றுக் கொண்ட பிறகு ஒவ்வொரு நாளும் சொல்லிக் கொண்டிருப்பது என்னவென்றால் அவர்கள் இந்த நாட்டை வன்முறையின் பக்கம் தள்ளிக் கொண்டிருக்கிறார்கள். அவர்கள் மத ரீதியாக, ஜாதி ரீதியாக மக்களை பிரித்தாள அரசியல் செய்து கொண்டிருக்கிறார்கள். இங்கே கலவரங்கள் வெடிக்கும், அப்போது மிக மோசமாக பாதிக்கப்படுவது பெண்களும், குழந்தைகளும் தான் என்பதை ஒவ்வொரு நாளும் நாம் சொல்லிக் கொண்டிருக்கிறோம். பிஜேபி ஆட்சியில் இருக்கும் ஒவ்வொரு மாநிலத்திலும் இந்த நடைமுறையை தான் தொடர்ந்து பார்த்துக் கொண்டிருக்கிறோம். குஜராத், உபி தொடர்ந்து இப்போது மணிப்பூரிலே எல்லாரையும் அதிர்ச்சியில் உறையவைக்கும், நினைத்துப் பார்க்கக் கூட முடியாத வன்கொடுமை நடந்திருக்கிறது.

#### உலகத்தையே உலுக்கிய வன்முறை!

நம்முடைய முதலமைச்சர் அண்ணன் அங்கே நடந்திருக்கிற வன் கொடுமையைப் பார்த்து இதயம் நொறுங்குகிறது என்று சொல்லி மகளிரணி இதை எதிர்த்து கழக மகளிரணி போராட்டங்களில் ஈடுபடும் என்று அறிவிக்கக் கூடிய அளவுக்கான உலகத்தையே உலுக்கியிருக்கும் வன்முறை அங்கே நடந்து கொண்டிருக்கிறது.

மணிப்பூர் மாநிலத்திலே பிஜேபி ஆட்சி நடந்து கொண்டிருக்கிறது. ஒன்றிய அரசாங்கம் பிஜேபி. நம்முடைய பிரதமர் மிகப் பெருமையாக சொல்லிக் கொள்வார் இரட்டை இன்ஜின் ஆட்சி என்று. அதாவது மாநிலத்திலும் நாங்கள்தான், ஒன்றியத்திலும் நாங்கள்தான் ஆட்சியில் இருக்கிறோம் என்று பிரதமர் மார் தட்டி பேசக் கூடிய நேரத்திலே மணிப்பூரிலே இருக்கக் கூடிய குகி, நாகா, மெய்தீ இனங்களுக்கு இடையே கலவரம் வெடிக்கிறது.

#### கலவரத்தைத் தூண்டிடும் பா.ஜ.க. முதல்வர்!

ஒரே நாளில் கலவரம் வெடித்துவிடவில்லை. ஆண்டாண்டு காலமாக அங்கே பிரச்சினை தொடர்ந்து இருந்துகொண்டிருக்கிறது. அங்கே அமைதியை உருவாக்க வேண்டும் என்பதற்காக நூற்றுக்கணக்கானோர் பாடுபட்டு அமைதியை உருவாக்குகிற நேரத்திலே பிஜேபி அங்கே ஆட்சிக்கு வருகிறது. நம்முடைய முதலமைச்சர் தளபதி அவர்கள், ‘நமக்கு வாக்களித்தவர்களுக்கு மட்டுமல்லாமல் வாக்களிக்காதவர்களுக்கும் சேர்த்துதான் நான் முதலமைச்சர்’ என்று சொல்லி அதன்படியே ஆட்சி நடத்தி வருகிறார்.



ஆனால் மணிப்பூரிலே முதலமைச்சராக இருக்கும் பிரைன் சிங் குகி இனத்தவரையும், நாகா இனத்தவரையும் கொச்சைப் படுத்தும் வகையிலே சிறுமைப்படுத்தும் வகையிலே…ஏதோ போதைப் பொருட்களை அவர்கள்தான் விளைவித்து விநியோகம் செய்து கொண்டிருக்கிறார்கள் என்றும் அவர்கள் மக்களுக்கு எதிரானவர்கள் என்றும் அவர்கள் இந்த நாட்டையே சாராதவர்கள் என்றும் தொடர்ந்து பேசி அம்மக்களின் உணர்வுகளை புண்படுத்தியிருக்கிறார். அதுமட்டுமல்ல மலைப் பகுதிகளில் வசிக்கும் குகி, நாகாக்களின் நிலங்களை பிடுங்கிக் கொள்ள வேண்டும் என்ற நிலைப்பாட்டையும் எடுக்கிறார்.

மணிப்பூரில் பெரும்பான்மை மக்களான மெய்தீ மக்கள்தான் ஆட்சி, அதிகாரத்தில் இருக்கிறார்கள். அவர்களைத்தான் பிஜேபி தன் தோளிலே தூக்கி சுமந்து கொண்டிருக்கிறது. அப்படிப்பட்ட சூழலிலே ஒடுக்கப்பட்டவர்களாக, ஒதுக்கப்பட்டவர்களாக மலையகங்களிலே வாழ்ந்து கொண்டிருக்கக் கூடிய மக்களை தொடர்ந்து கொச்சைப்படுத்தக் கூடிய வகையிலே ஒரு முதலமைச்சர் தொடர்ந்து பேசிக் கொண்டிருக்கிறார். இதைப் பார்த்து அம்மாநில பாஜக எம்.எல்.ஏ.க்களே இவர் மீது மக்களுக்கு நம்பிக்கை இல்லை என்று சொல்லக் கூடிய ஒரு முதலமைச்சராக அவர் இருக்கும் சூழலை பார்க்கிறோம்.

#### 70 நாட்களுக்கும் மேல் கலவரம்… 7 நாடுகளுக்கு பிரதமர் பயணம்!

இந்த நிலையிலே சமவெளி நிலங்களிலே வாழக் கூடிய மெய்தீ மக்களுக்கும் இட ஒதுக்கீடு வழங்குவது என்பது குறித்து நீதிமன்றம் அரசாங்கத்திடம் அறிக்கை கேட்கிறது. இதனால் தங்கள் உரிமைகள் பாதிக்கப்படும் என்று குகி இன மக்களும் நாகாக்களும் ஒரு ஊர்வலம் செல்கிறார்கள். அன்று வெடிக்கிறது கலவரம். மே 3 ஆம் தேதி நடந்த ஊர்வலத்திலே தொடங்கிய கலவரம், இன்றுவரை அடங்கவில்லை. கிராமங்கள் எரிகின்றன, சர்ச்சுகள் உடைக்கப்படுகின்றன, கோயில்கள் கொளுத்தப்படுகின்றன, மக்கள் கொல்லப் படுகிறார்கள். பெண்கள் பாலியல் வன்முறைக்கு ஆளாக்கப்படுகிறார்கள். ஆனால் நம்முடைய பிரதமர் என்ன செய்து கொண்டிருக்கிறார்? ஏழு வெளிநாடுகளுக்கு பயணம் செய்து, அங்கே இருக்கக் கூடிய மக்களை சந்தித்து கையசைத்துக் கொண்டு, வெளிநாடுகளில் இருக்கும் தலைவர்களுடன் கை குலுக்கிக் கொண்டு விருந்து சாப்பிட்டுக் கொண்டு… ‘இந்தியாவில் ஒற்றுமையோடு மக்கள் வாழ்ந்து கொண்டிருக்கிறார்கள், சிறப்பாக நாங்கள் ஆட்சி செய்து கொண்டிருக்கிறோம்’ என்ற செய்தியை பொய்யாக அங்கே பேசிக் கொண்டு… இந்த மணிப்பூர் பிரச்சினையிலே மௌனமாக இருந்திருக்கிறார்.

அங்கே 140க்கும் மேல் உயிரிழந்திருக்கிறார்கள். ஆயிரக்கணக்கானவர்கள் வீடுகளில் இருந்து, கிராமங்களில் இருந்து விரட்டியடிக்கப்பட்டார்கள். பலர் மருத்துவ வசதிகள் கிடைக்காமல் துன்பப்பட்டுக் கொண்டிருக்கிறார்கள். இவ்வளவு நடந்தும் பிரதமர் வாயைத் திறந்து மணிப்பூர் பற்றி ஒரு வார்த்தை பேசவில்லை.

உள்துறை அமைச்சர் அமித் ஷா அங்கே செல்கிறார், அங்கே என்ன நிலவரம் என்று அவர் பார்த்துவந்த பிறகு கூட அங்கே எந்த அமைதியும் உருவாகவில்லை. கலவரங்கள் தொடர்ந்து நடந்து கொண்டிருக்கிறது. அங்கிருக்கும் பாதிக்கப்பட்ட குகிகள், நாகாக்கள் மீதுதான் பாஜகவினர் தொடர்ந்து வன்முறையை அவிழ்த்துவிட்டுக் கொண்டிருக்கிறார்கள். அவர்கள் மீது பழியை சுமத்திக் கொண்டிருக்கக் கூடிய சூழலிலே அங்கே ஆளும் வர்க்கமே அமைதியாக இருக்கிறது.

#### வீடியோவுக்குப் பின் உடைந்த மோடி மௌனம்!

இந்த சூழலில்தான் அந்த வீடியோ சமூக வலை தளங்களில் வருகிறது. யாராலும் சகித்துக் கொள்ள முடியாத அந்த காட்சிகள் உலகம் முழுதும் பரவுகிறது. மனித இனமே தலைகுனிய வேண்டிய வீடியோ. கூக்கி இனத்தைச் சேர்ந்த இரு பெண்கள்… 40 வயது மதிக்கத் தக்க ஒரு பெண், 21வயதுடைய ஒரு பெண். இருவரையும் அவர்களின் ஆடைகளை களையச் செய்து ஒரு கும்பல் அவர்களை ஏதோ ஆடு மாடுகள் போல இழுத்துச் செல்கிறது. போகக் கூடிய வழியில் எல்லாம் அவர்கள் துன்பப்படுத்தப்படுகிறார்கள். அவர்களைப் பாதுகாக்க வந்த தந்தையும், தனயனும் அடித்துக் கொலை செய்யப்படுகிறார்கள். 19 வயது சிறுவன் அந்தப் பெண்ணுடைய தம்பி, அடித்துக் கொலை செய்யப்படுகிறான். தாக்கப்பட்ட பெண்களில் ஒருவரின் கணவர், இந்த நாட்டை பாதுகாப்பதற்காக ராணுவத்தில் பணிபுரிந்தவர்.

கற்பனை கூட செய்ய முடியாத அளவுக்கு அந்தப் பெண்கள் இழுத்துச் செல்லப்பட்டு, வார்த்தைகளால் கூற முடியாத அளவுக்கு கொடுமைகளுக்கு உள்ளாக்கப்பட்டு வன்புணர்வு செய்யப்பட்டு வீசியெறியப்படுகிறார்கள். இது வீடியோக்களாக வலைதளங்களிலே வருகிறது. அதற்குப் பிறகுதான் தன்னுடைய மௌனத்தைக் கலைக்கிறார் பிரதமர் அவர்கள்.

#### பாராளுமன்றத்தை அவமதிக்கும் மோடி

அதுவும் பாராளுமன்றம் தொடங்கும் அந்த நாளிலே பாராளுமன்றத்துக்கு உள்ளே வந்து பேச பிரதமர் தயாராக இல்லை. பாராளுமன்ற வளாகத்திலே பத்திரிகையாளர்களை சந்தித்து பிரதமர் அதை தெரிவிக்கிறார். இந்த நாட்டிலே பிரதமர் பத்திரிகையாளர்களை சந்திப்பது என்பதே பெரிய செய்தி. இத்தனை ஆண்டுகளாக கடைபிடித்து வரக் கூடிய ஒரு முறை, வழமை என்னவென்றால் பாராளுமன்றம் நடந்துகொண்டிருக்கும்போது பிரதமர் பாராளுமன்றத்தில்தான் பேச வேண்டும். ஆனால் பிரதமர் பாராளுமன்றத்தை, ஜனநாயகத்தை அவமதிக்கக் கூடிய வகையிலே வெளியிலே நின்று பத்திரிகையாளர்களை சந்தித்து பேட்டியளித்துவிட்டுச் செல்கிறார்.

தொடர்ந்து எதிர்க்கட்சிகள் அமளியிலேயே ஈடுபடுகின்றன. நம்முடைய தமிழச்சி தங்கபாண்டியன் எடுத்துச் சொன்னதைப் போல திராவிட முன்னேற்றக் கழகம் உள்ளிட்ட எதிர்க்கட்சிகள் பாராளுமன்றத்தில் மணிப்பூர் கலவரங்கள், பெண்களின் நிலை பற்றி விவாதிக்கப்படவேண்டும் என்று நோட்டீஸ் கொடுத்துவிட்டு நாங்கள் அமளியிலே ஈடுபடுகிறோம். ஆனால் பிரதமர் பாராளுமன்றத்துக்கு வந்து எங்களை சந்தித்து இதுபற்றி விவாதிப்பதற்குத் தயாராக இல்லை.

#### எந்த மாதாவைக் காப்பாற்றுகிறார்கள்?

ஆனால் ஒவ்வொரு நாளும் பாரத் மாதாகீ ஜே என்கிறார்கள். எந்த மாதாக்களை காப்பாற்றுகிறார்கள்? அங்கே இருக்கும் பெண்கள் தாய்கள் இல்லையா, தங்கைகள் இல்லையா, உங்களுடைய சகோதரிகள், குழந்தைகள் இல்லையா? எந்தப் பெண்ணைக் காப்பாற்றுகிறீர்கள் நீங்கள்? ஒரு பெண்ணை மேடையில் ஏற்றி அழகு பார்க்கக் கூடிய அந்த பெருமை, நிலை எங்களுக்குத் தேவையில்லை. ஒரு பீடத்திலே பெண்களை ஏற்றி தாயாக மதிக்கிறோம், தெய்வமாக மதிக்கிறோம் என்றெல்லாம் சொல்கிற அந்த போலித் தனங்கள் எங்களுக்குத் தேவையில்லை., ஒரு பெண்ணை சக மனுஷியாக உனக்கு இணையாக அவளது உடலை மதிக்கத் தெரிந்த சமூகத்தை உருவாக்குவதுதான் உண்மையான ஆட்சி செய்ய வேண்டிய ஒன்று.

ஆனால் இது பிஜேபிக்கு என்றும் புதிதல்ல. பில்கிஸ் பானு வழக்கை எடுத்துக் கொள்ளுங்கள். குஜராத் கலவரங்களின் போது மிக மோசமான வன்முறைக்கு ஆளாக்கப்பட்ட பெண். அந்த வன்முறையாளர்கள் அத்தனை பேரும் விடுதலை செய்யப்படுகிறார்கள். மே 4 ஆம் தேதி மணிப்பூரில் இந்த வன்முறை நடக்கிறது. அந்த வன்முறை நடக்கும்போது போலீஸ்காரர்கள் அங்கேதான் இருந்திருக்கிறார்கள். அந்த பெண்களை அந்த கும்பலிடம் விட்டுவிட்டு போலீஸ்காரர்கள் ஓடிப் போகிறார்கள். இப்படி கலவரம் நடக்கிறது என்று போலீசுக்கு தெரிந்திருக்கிறது. எஃப்.ஐ.ஆர். பதிவு செய்யப்படுகிறது. இப்படி ஒரு வன்முறை நடப்பது மகளிர் ஆணையத்துக்கும் தெரிந்திருக்கிறது. எல்லாரும் கள்ள மௌனம் காத்துக் கொண்டிருக்கிறார்கள். யாரும் இதுபற்றி எந்த நடவடிக்கையும் எடுக்கவில்லை, இந்த வீடியோக்கள் வெளியாகும் வரை.

அந்த பெண்களுக்கு என்ன நடந்தாலும் பரவாயில்லை என்று நினைக்கக் கூடிய அரசாங்கம் அல்லது தான் ஆட்சி நடத்தும் மாநிலத்தில் என்ன நடக்கிறது என்பதைப் பற்றி தெரிந்துகொள்ள அக்கறை இல்லாத அரசாங்கம். இந்த இரண்டு வகையிலுமே அங்கே ஆட்சியில் இருக்க அருகதை அற்றவர்கள் பாஜகவினர் என்பதை புரிந்து கொள்ள வேண்டும். இதற்குப் பொறுப்பேற்று ஆட்சிப் பொறுப்பிலே இருப்பவர்கள் தலைகுனிந்து பதவி விலக வேண்டும். செய்ய மாட்டார்கள். மனசாட்சி என்று ஒன்று இருந்தால்தானே? இதைப் பற்றி விவாதிக்கக் கூட அவர்கள் தயாராக இல்லை.

உச்ச நீதிமன்றம் தலையிட்டு, ‘நீங்கள் நடவடிக்கை எடுக்கவில்லை என்றால் உச்ச நீதிமன்றமே தானாக முன் வந்து நடவடிக்கை எடுக்க வேண்டிய நிலை வந்து விடும்’ என்று எச்சரித்த பிறகு நம்முடைய பிரதமர் வாய் திறக்கிறார். இப்படிப்பட்ட ஆட்சி இந்த நாட்டுக்குத் தேவையா என்று நாம் கேட்க வேண்டிய தருணம் இது. அவர்கள் ஆட்சியில் இருக்கும் ஒவ்வொரு மாநிலத்திலும் எத்தனை கலவரங்கள்? யார் என்ன உடுத்துகிறார்கள் என்று கலவரம். யார் என்ன உண்ணுகிறார்கள் என்று கலவரம். வீட்டில் மாட்டுக் கறி வைத்திருந்தார்கள் என்று சொல்லி எத்தனை பேர் அடித்துக் கொலை செய்யப்பட்டிருக்கிறார்கள்.

#### அடுத்த தேர்தலை அல்ல… அடுத்த தலைமுறையைப் பற்றிப் பேசுகிறேன்!

ஒரு தனக்கு எது வசதி என்று அவள் தான் முடிவு செய்ய வேண்டும், தான் எதை உடுத்தினால் தனக்கு வசதியாக இருக்கும் என்று அவள்தான் முடியும் செய்ய வேண்டும் என்று சொன்ன பெரியாரின் நாடு இது. இந்த நாட்டிலே ஒரு பெண் எதை உடுத்தினாலும் அது அவளுடைய தேர்வாக அவளுடைய வசதியாக இருக்க வேண்டும். இந்த நாட்டிலே பிஜேபியால் துன்புறுத்தப் படுவர்கள் எத்தனை எத்தனை பேர். ஒரு பெண்ணுடைய திருமணத்தை அவளால் தீர்மானம் செய்ய முடியாது. அதற்கான சட்டம் கிடையாது. பெண்களை பாதுகாக்க எந்த வழியும் கிடையாது.

பெண்களை மதிக்கிறோம் மதிக்கிறோம் என்கிறார்கள்… தாய் நாடு தாய்நாடு என்கிறார்கள்., ஆனால் இந்த தாய் நாட்டிலே எந்த ஒரு பெண்ணுக்கும் பாதுகாப்பு இல்லாத நிலையை ஏற்படுத்தி வைத்திருக்கிறது பாஜக ஆட்சி. இங்கே வன்முறைகளை, காழ்ப்புணர்வுகளை, வெறுப்பை, பகைமையை கட்டவிழ்த்துவிட ஆணுக்கும் பெண்ணுக்கும் குழந்தைக்கும் என யாருக்கும் இங்கே பாதுகாப்பு இல்லை, எதிர்காலமும் இல்லை என்பதை நாம் புரிந்துகொள்ள வேண்டும்.

இது அரசியல் இல்லை, நான் அடுத்த தேர்தலைப் பற்றி பேசவில்லை. அடுத்த தலைமுறை, அடுத்த தலைமுறை, அதற்கு அடுத்த தலைமுறையின் பாதுகாப்பைப் பற்றி பேசுகிறேன் - இந்த நாட்டின் வளர்ச்சியை பற்றி பேசுகிறேன். அதனால்தான் இந்த ஆர்பாட்டத்தை மகளிர் அணி நிர்வாகிகள் முன்னெடுத்துச் செல்வார்கள் என்று நம்பிக்கையோடு நம்மிடம் ஒப்படைத்திருக்கிறார்கள்.

இங்கே எழக் கூடிய குரல் இந்தியாவின் ஒவ்வொரு மாநிலத்திலும் எதிரொலிக்க வேண்டும். நம்முடைய செங்கோலை அங்கே கொண்டு வைத்திருக்கிறார்களே. அந்த செங்கோலை ஆட்டி அவர்களின் கைகளில் இருந்து பிடுங்கக் கூடிய நாள் விரைவிலே வரும்.

இவ்வாறு கனிமொழி கருணாநிதி எம்.பி. உரையாற்றினார்.

இந்த கண்டன ஆர்ப்பாட்டத்தில், தென் சென்னை நாடாளுமன்ற உறுப்பினர் தமிழச்சி தங்கபாண்டியன், சென்னை வடக்கு நாடாளுமன்ற உறுப்பினர் கலாநிதி வீராசாமி, சென்னை மேற்கு மாவட்ட திமுக செயலாளர் சிற்றரசு எம்.சி, தி.மு.க. மகளிரணி செயலாளர் ஹெலன் டேவிட்சன், திமுக மகளிரணி இணைச் செயலாளர் குமரி விஜயகுமார், திமுக மகளிர் தொண்டரணிச் செயலாளர் நாமக்கல் ராணி, மானாமதுரை சட்டமன்ற உறுப்பினர் தமிழரசி ரவிக்குமார், விஜயா தாயன்பன், சேலம் சுஜாதா உள்ளிட்ட தி.மு.க. மகளிர் அணியைச் சார்ந்த பெண்கள் மற்றும் பொதுமக்கள் எனப் பல்லாயிரக் கணக்கானோர் பங்கேற்றனர்.